

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும்
இணுவில் மஞ்சத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட,

அமரர்

# கார்த்திகேசு தம்பிராசா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



அவர்களின் விண்ணுலகப்பேறு குறித்த,


# நினைவு மலர்

31.12.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும்
இணுவில் மஞ்சத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட,

அமரர்

# கார்த்திகேசு தம்பிராசா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்களின் விண்ணுலகப்பேறு குறித்த,

# நினைவு மலர்

31.12.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## சமர்ப்பணம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
அன்புடன் எம்மைப்
பேணிக்காத்து வழிநடத்தி
பெருமையுடன் வாழ வைத்த தெய்வம்
“குடும்பத்தின் ஒளிவிளக்கு”
கார்த்திகேசு தம்பிராசா அவர்களின்
பாதார விந்தங்களில்
இம் மலரினைக் காணிக்கையாக்கிச்
சமர்ப்பிக்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலால் மறைந்து போனாலும்
உள்ளத்துள் மறைந்துபோகாத
**உயரிய தந்தை!**

அன்னை மடியில்
18 . 12 . 1939



ஆண்டவன் அடியில்
01 . 12 . 2021

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும்
இணுவில் மஞ்சத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட.

அமரர்

# கார்த்திகேசு தம்பிராசா

*(ஓய்வுபெற்ற ஆசிரியர்)*

**திதி நிர்ணயம்**

ஆண்டு பிலவவினிலே ஆன கார்த்திகைப் புதன்
பூண்ட அபர பக்க துவாதசியே- ஈண்டு
தம்பிராசா என்றழைத்த ஆசான் மஞ்சத்தடியான்
பாதம் மெய்மையாய் புகுந்திட்ட தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறைபோலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

திருச்சிற்றம்பலம்

# பஞ்சபுராணம்

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசியென்னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மான் இவனன்றே.

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக் கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

பித்தாப்பிறை சூடீபெரு மானேயருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூரருட்டுறையுள்
அத்தா வுனக்காளாயினி யல்லே னெனலாமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே !
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத்தா னந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழறஉழறி
உமை மணவாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையேயாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்து விகமே யாக
இந்துவாள் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையின் தனிப் பெருங்கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்

**திருச்சிற்றம்பலம்**

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமற் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
அறம் நாலைப் புகல்வோனே அவிநாசிப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

மாணிக்கவாசக சுவாமிகள்

அருளிச் செய்த

# சிவபுராணம்

திருப்பெருந்துறையில் அருளியது

(சிவனது அநாதி முறைமையான பழைமை)



## கலிவெண்பா

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏக னனேகன் இறைவன் அடிவாழ்க!

வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரம்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி;
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி;
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி;
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி;
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி;

ஆராத இன்பம் அருளுமலைபோற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே.

ஆக்க மளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனம்கழிய நின்ற மறையோனே.

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த், தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே.

அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றி புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

எவனொருவன் வாழ்நாளை சதா இறை சிந்தனையுடன் கழித்து இறுதியில் தன் ஆவியை உத்தராயணத்திலும் பகற் காலத்தின் சுப வேளையிலும் பூர்வ பக்கத்திலும் அக்கினி தேவதையின் ஆகர்ணத்திலும் விடுகின்றானோ அவன் பிறவா நெறியதன் முத்தி பேற்றை அடைகிறான்.

- கீதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவண்ணாமலையில் அருளியது

(சக்தியை வியந்தது)

# திருவெம்பாவை



திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போ திப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தன்ன வெண்ணெகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மை தீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழிகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்.

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான்ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையேயெமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையுமிலோ மேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓதஉலவா ஒரு தோழன் தொண்ட ருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்.

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடி யோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யாவெண் ணீறாடீ செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமை யேலோர் எம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய்.

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதார் குழையாடப் பைப்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடி சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதிதிறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணார ரமுதமுமாய்நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.


உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்குஅப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங்காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறெமக் கேலோர் எம்பாவாய்.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் கதை



### காப்பு

கரும்பும் இளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன்மேல் - அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்குக் காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவதனில் ஏறி
வரும் அரன்றான் ஈன்றருளும் மைந்தா - முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத்தொழுவேன்
என்கதைக்கு நீ என்றுங் காப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செற்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

ஒற்றை மருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் - பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனத்தில் எப்பொழுதுங்
கொண்டக்கால் வாராது கூற்று.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்து உனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

## சப்பாணி

எள்ளு பொரிதேன் அவல்அப்பமிக்கும் பயறும் இளநீரும்
வள்ளிக் கிழங்கும் மாம்பழமும், வாழைப்பழமும், பலாப்பழமும்,
வெள்ளைப்பாலும், மோதகமும் விரும்பிப்படைத்தேன் சந்நிதியில்
கொள்ளைக் கருணைக் கணபதியேகொட்டி அருள்க சப்பாணி.

சண்டப் பெருச்சாளி ஏறிச் சடை கொண்டு வையத் துலாவி,
அண்டத்து அமரர் துதிக்க அடியார்க்கு அருளும் பிரானே,
எண்திக்கும் அன்பர்கள் பார்க்க இணையற்ற பேரொளி வீசக்,
குண்டைக் கணபதி நம்பி கொடுங்கையாற் சப்பாணி கொட்டே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரஸ்வதி துதி

புத்தகத் துள்ளுறை மாதே பூவில் அமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளாய் நங்காய் வேதப் பொருளுக்கு இறைவீ
முத்தின் குடைஉடை யாளே மூவுல குந்தொழுது ஏத்துஞ்
செப்புக் கவித்த முலையாய் செவ்வரி ஓடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய் சரஸ்வதி என்னுந் திருவே
எக்காலமும் உன்னைத் தொழுவேன் இயல் இசை நாடகம் என்னும்
முத்தமிழ்க் கல்விகள் எல்லாம் முழுதும் எனக்கருள் செய்துஎன் சித்தந்
தனில்நீ இருந்து திருவருள் செய்திடு வாயே.

## அதிகாரம்

பொன்னிறங் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை இருந்த சீர்சால் முனிவன்
கந்த மும்மதக் கரிமுகன் கதைதனைச்
செந்தமிழ் வகையால் தெளிவுறச் செப்பினன்
அன்னதிற் பிறவில் அரில்தபத் திரட்டித்
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதையே.

## கதை

மந்திர கிரியில் வடபால் ஆங்கு ஓர்
இந்துதவழ் சோலை இராசமா நகரியில்
அந்தணன் ஒருவனும் ஆயிழை ஒருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுள் ஆலயமுங் கடிமலர்ப் பொய்கையும்
தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைத் தருகெனப் பொருப்பு அரசு ஈன்ற
மதர்விழி பாகனை வழிபடும் நாளில்
மற்றவர் புரியும் மாதவங் கண்டு
சிற்றிடை உமையாள் சிவனடி வணங்கிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரனே சிவனே பல்லுயிர்க்கு உயிரே
அரனே மறையவற்கு அருள்புரிந்து அருளென
அந்த அந்தணனுக்கு இந்த நற்பிறப்பில்
மைந்தரில்லை என்று மறுத்து அரன் உரைப்ப
எப்பரி சாயினும் எம்பொருட்டு ஒரு சுதன்
தப்பிலா மறையோன் தனக்கு அருள் செய்கென
எமையாளுடைய உமையாள் மொழிய
இமையா முக்கண் இறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதைமை என்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்

பேதாய் நீ போய்ப் பிறவென மொழிய
மாதுஉமை யவளும் மனந்தளர்வு உற்றுப்
பொன்றிடு மானுடப் புன்பிறப்பு எய்துதல்
நன்றல என்றே நடுக்கமுற்று உரைப்பக்
கறைமிடற்று அண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுதல் அவட்கு நீ பிள்ளை யாகச்
சென்று அவண் வளர்ந்து சிலபகல் கழித்தால்
மன்றல் செய்தருள்வோம் வருந்தலை என்று
விடைகொடுத்து அருள விலங்கன் மாமகளும்
பெடைம யிற்சாயற் பெண்மக வாகித்

தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற்றில் உதித்துப்
பாவை சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற இயல்பின ளாகி
ஐயாண்டு அடைந்த பின் அன்னையும் அத்தனும்
மையார் கருங்குழல் வாள்நுதல் தன்னை
மானுட மறையோற்கு வதுவை செய்திடக்
கானமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்பிறப் பில்லாப் பெரியோற்கு அன்றி
அறத்தகு வதுவைக்கு அமையேன் யான் என


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவன் தன்னை உன் மணமகனாகப்
பெற்றிடல் அரிதெனப் பெயர்த்து அவர் பேச
அருந்தவ முயற்சியால் அணுகுவேன் யானெனக்
கருந்தட நெடுங்கண் கவுரி அங்கு உரைத்து
மருமலி கமல மலர்த்தடத்து அருகில்
தருமலி நிழல் தவச் சாலையது அமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழல் உமை அருந்தவம் புரிதலும்
அரிவை தன் அருந்தவம் அறிவோம் யாமென
இருவரும் அறியா இமையவர் பெருமான்

மான் இடம் ஏந்தும் வண்ணமது ஒழிந்து
மானிட யோக மறைவன் ஆகிக்
குடையொடு தண்டு நற்குண்டிகை கொண்டு
மடமயில் தவம்புரி வாவிக் கரையில்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்நறும் கூந்தல் தையலை நோக்கி
மின்பெறு நுண்ணிடை மெல்லியலாய் நீ
என்பெறத் தவமிங்கு இயற்றுவது என்றலும்
கொன்றை வார்சடையனைக் கூட என்று உரைத்தலும்

நன்று எனச் சிரித்து நான்மறை யோனும்
மாட்டினில் ஏறி மான் மழுத் தரித்துக்
காட்டினிற் சுடலையிற் கணத்துடன் ஆடிப்
பாம்பும் எலும்பும் பல்தலை மாலையுஞ்
சாம்பரும் அணிந்து தலையோடு ஏந்திப்
பிச்சை கொண்டு உழலும் பித்தன் தன்னை
நச்சி நீ செய்தவம் நகைதரும் உமக்கெனப்
பூங்கொடி அருந்தவம் பூசுரன் குலைத்தலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கு அவள் நாணமுற்று அணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர் குழலியை
வாடுதல் ஒழிகென மனமிகத் தேற்றிச்

சிந்துர வாள்நுதற் சேடியர் சிலர் போய்த்
தந்தை தாயிருவர் தாளிணை வணங்கி
வாவிக் கரையில் வந்தொரு மறையோன்
பாவைதன் செங்கையைப் பற்றினன் என்றலும்
தோடு அலர்கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத்து அணிமனை கொணர்க என
மாடக யாழ்முரல் மங்கையர் ஓடி
நீடிய புகழாய் நீ எழுந்து அருள் என
மைம்மலர்க் குழலி வந்து எனை அழைக்கில்
அம்மனைப் புகுவன் என்று அந்தணன் உரைத்தலும்

பொற்றொடி நீ போய்ப் பொய்கையில் நின்ற
நற்றவ முனியை நடாத்திக் கொணர்கெனச்
சிவனை இகழ்ந்த சிற்றறிவுடையோன்
அவனையான் சென்றிங்கு அழைத்திடேன் என்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறினள் ஆகி
மற்றைய மாதர் மதிமுகம் நோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக்கு அல்லதென்
பொற்புஅமர் கொங்கை பொருந்துதற்கு அரிதால்
மானிட வேட மறையவன் தனக்கு
யான் வெளிப்படுவது இல்லையென்று இசைப்ப

மலையிடை வந்த மாமுனி தன்னை இணையடி
தொழுதல் இளையோர்க்கு இயல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை குளிர்ந்து சீறுதல் ஒழிந்து
தாய் சொல்மறுத்தல் பாவமென்று அஞ்சி
ஆயிழை தானும் அவனெதிர் சென்று
சுற்றிவந்து அவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் தன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற்கு அன்பன் ஆகும்
வேதியன் பழைய விருத்தன் என்றெண்ணி

ஆசனம் நல்கி அருக்கியம் முதலாப்
பாத பூசனைகள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி அழகிய பலாச்சுளை
தேன் கதலிப்பழம் சீர்பெறப் படைத்து
அந்தணன் தன்னை அமுது செய்வித்துச்
சந்தனங் குங்குமச் சாந்து இவை கொடுத்துத்
தக்கோலத்தொடு சாதிக் காயும்
கற்பூரத்தொடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை அடைக்காய் விளங்கிய பொன்னின்

ஒள்ளிய தட்டில் உகந்து முன்வைத்துச்
சிவனெனப் பாவனை செய்து நினைந்து
தவமறை முனிவனைத் தாளிணை வணங்கத்
தேனமர் குழலி திருமுகம் நோக்கி
மோனமாமுனி புன்முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியில் நயனமும் நீல கண்டமும்
மானும் மழுவும் மலர்க்கரத்து இலங்கக்
கூன்மதி நிலவும் கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில் காணக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரந்ததன் உருவங் காட்டி முன்நிற்ப
மரகத மேனி மலைமகள் தானும்
விரைவொடு அங்கு அவன் அடி வீழ்ந்து இறைஞ்சினளே
அரிஅயன் இந்திரன் அமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவர் அவுணர் இராக்கதர்
பூதர் இயக்கர்கிம் புருடர் அலகை
சித்தர் தாரகை கந்தர்வர்கள் முதலாய்க்
கணிக்கரும் பதினெண் கணத்தில் உள்ளவரும்
மணிக்கருங் களத்தனை வந்தடைந்து அதன்பின்

மன்றல் அங் குழலிக்கு வதுவைநாள் குறித்துத்
தென்றல் வந்துஇலங்கு முன்றில் அகத்துப்
பொன்திகழ் பவளப் பொற்கால் நாட்டி
மாணிக்கத்தால் வளை பல பரப்பி
ஆணிப்பொன் தகட்டால் அழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை தூக்கிப்
பக்திகள் தோறும் பலமணி பதித்துத்
தோரணம் நாட்டித் துகில் விதானித்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறும் திருவிளக்கேற்றிப்

பத்திப் படர்முளைப் பாலிகை பரப்பிக்
கன்னலுங் கமுகுங் கதலியும் நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர் சோடித்து
நலமிகு கைவலோர் நஞ்சணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளிர் மலைமகள் தன்னைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணக் கோலஞ் செய்தனர் ஆங்கே
எம்பிரானையும் இளங்கொடி தன்னையும்
உம்பர் எல்லாம் ஒருங்குடன் கூடிக்
கடலென விளங்கும் காவணந் தன்னில்

சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையில்
மறைபுகழ்ந்து ஏத்த மகிழ்ந்து உடன் இருத்திப்
பறையொலியோடு பனிவளை ஆர்ப்ப
வதுவைக்கு ஏற்ற மறைவிதி நெறியே
சதுர்முகன் ஓமச் சடங்குகள் இயற்றத்
தறுகலன் ஒளிபொன் தாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்
அரிவலஞ் சூழ எரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்
போதுஅணி கருங்குழற் பூவை தன்னுடனே

ஓதநீர் வேலிசூழ் உஞ்சையம் பதிபுக
ஏரார் வழியில் எண்திசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி நீ என
வருங்கருங் குழலாள் மற்றும் உண்டோ எனத்
திருந்து இழை மடந்தை திரும்பினாள் பார்க்கக்
களிறும் பிடியுங் கலந்து விளையாடல் கண்டு
ஒளிர்மணிபூணாள் உரவோண் உடனே
இவ் வகையாய் விளையாடுவோம் ஈங்கென
அவ்வகை அரனும் அதற்கு உடன் பட்டு
மதகரி உரித்தோன் மதகரி யாக

மதர்விழி உமைபிடி வடிவம் அதாகிக்
கூடிய கலவியில் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணர் சிறக்க ஆனினம் பெருகச்
செந்தழல் வேள்வி வேத ஆகமம் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல அரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக்கையோடு
ஐங்கர தலமும் மலர்ப்பதம் இரண்டும்
பவளத்து ஒளிசேர் பைந் துவர்வாயும்

தவளக் கிம்புரித் தடமருப்பு இரண்டும்
கோடி சூரியர் போற் குலவிடு மேனியும்
பேழைபோல் அகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியில் நயனமும் முப்புரி நூலும்
கற்றைச் சடையுங் கனக நீண்முடியுந்
தங்கிய முறம்போல் தழைமடிச் செவியுமாய்
ஐங்கரத்து அண்ணல் வந்து அவதரித்தலும்
பொங்கரவு அணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்து உடன் நோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்த நான் முகனும்

மண்ணு ளோர்களும் வந்து உனை வணங்க
ஆங்கு அவர் தங்கட்கு அருள் சுரந்து அருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி அளித்துப்
பாரண மாகப் பலகனி அருந்தி
ஏரணி ஆலின்கீழ் இனிதுஇரு என்று
பூதலந் தன்னிற் புதல்வனை இருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்து இனிது இருந்த பின்
வான வராலும் மானு டராலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானமர் கொடிய கடு விலங்காலும்
கருவிகளாலுங் காலனாலும்
ஒரு வகையாலும் உயிரழியாமல்
திரம்பெற மாதவஞ் செய்து முன்னாளில்
வரம் பெறுகின்ற வலிமை யினாலே
ஐம்முகச் சீயம் ஒத்து அடற்படை சூழக்
கைம்முகம் படைத்த கயமுகத்து அவுணன்
பொன்னுலகு அழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை இடுக்கண் படுத்திக்
கொடுந்தொழில் புரியுங் கொடுமை கண்டு ஏங்கி

அடுந்தொழிற் குலிசத்து அண்ணலும் அமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புரம் எரித்தோன்
அஞ்சலீர் என்று அவர்க்கு அபயங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுகத்து அண்ணலை நோக்கி
ஆனை மாமுகத்து அவுணனோடு அவன் தன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்ந்த குறட்படை கூட்டி
வென்று வா என்று விடை கொடுத்தருள
ஆங்கு அவன் தன்னோடு அமர்பல உடற்றிப்

பாங்குறும் அவன்படை பற்றறக் கொன்றபின்
தேர்மிசை ஏறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்
ஒற்றைவெண் மருப்பை ஒடித்து அவன் உரத்திற்
குற்றிட எறிந்தான் குருதிசோர்ந் திடவே
சோர்ந்தவன் வீழ்ந்து துண்ணென எழுந்து
வாய்ந்த மூடிகமாய் வந்து அவன் பொரவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த மூடிகத்தை வாகனம் ஆக்கி
எந்தை விநாயகன் ஏறினன் இப்பால்
எறிந்த வெண்மருப்பு அங்கு இமைநொடி அளவில்

செறிந்தது மற்று அவன் திருக் கரத்தினிலே
வெல்லவைக் கதிர்வேல் விழிபடைத்து அருளும்
வல்லவை தனைத்தன் மனை என மணந்தே
ஓகையோடு எழுந்து ஆங்கு உயர்படை சூழ
வாகையும் புனைந்து வரும் வழி தன்னிற்
கருச்சங் கோட்டிக் கயல் கமுகு ஏறும்
திருச்செங் காட்டிற் சிவனை அர்ச்சித்துக்
கணபதீச் சரம் எனுங் காரண நாமம்
கணபதி புகழ்தரு பதிக்கு உண்டாக்கிச்
சங்கரன் பார்ப்பதி தனிமன மகிழ

இங்குவந்து அன்புடன் எய்திய பின்னர்க்
கணங்களுக்கு அரசாய்க் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமை பெற்று இருந்திட ஆங்கே
தேவர்கள் முனிவர் சித்தர் கந்தருவர்
யாவரும் வந்து இவன் ஏவல் செய்திடுநாள்
அதிகமாய் உரைக்கும் ஆவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகற் குரிய விரதமென்று என்றெண்ணி
மனாதிகள் களித்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட்டு எண்ணிய பெறுநாள்

ஒப்பரும் விரதத்து உறும் ஒரு சதுர்த்தியில்
நோற்று நற்பூசை நுடங்காது ஆற்றிப்
போற்றி செய்திட்டார் புலவர் ஐங்கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிருமலன் குமரன் நிருத்தம் புரிந்தான்
அனைவருங் கைதொழுது அடிஇணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக்கு அதனால்
பேழைபோல் வயிறும் பெருத்த காத்திரமும்
தாழ்துளைக் கையும் தழைமுறச் செவியும்
கண்டனன் நகைத்தான் கரிமுகக் கடவுளும்

கொண்டனன் சீற்றம் குபேரனை நோக்கி
என்னைக் கண்டு இங்கு இகழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவர் உரைக்கும் இத்தினத்திற்
பழியொடு பாவமும் பலபல விதனமும்
அழிவும் எய்துவர் என்று அசனிபோற் சபித்தான்
விண்ணவர் எல்லாம் மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுள் இத் தினத்திற்
கோரவெஞ் சினமிகக் கொண்டனன் அன்னான்
மார்கழித் திங்கண் மதிவளர் பக்கஞ்
சதயந் தொட்ட சட்டிநல் விரதமென்று

இதயத்து எண்ணி யாவரும் நோற்றார்.
இப்புவி மாந்தர் இயம்பிய விரதம்
வைப்புடன் நோற்ற வகை இனிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத்து உதித்த
தருமனும் இளைய தம்பி மார்களும்
தேவகி மைந்தன் திருமுக நோக்கி
எண்ணிய விரதம் இடையூ றின்றிப்
பண்ணிய பொழுதே பலிப்பு உண் டாகவுஞ்
செருவினில் எதிர்ந்த செறுநரை வென்று
மருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தத் தெய்வம் எவ்விரதத்தை வந்தனை
செய்யில் வருநமக்கு உரையெனப்
பாட்டுஅளி துதையும் பசுந்துழாய் மார்பனுங்
கேட்டருள் வீர் எனக் கிளர்த்துதலுற்றான்.
அக்கு நீறணியும் அரன்முதல் அளித்தோன்
விக்கினந் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஓடவைத் திடும்பொன் ஒத்துஒளி விளங்கும்
கோடி சூரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புய முடையோன்

சர்வா பரணமுந் தரிக்கப் பெற்றவன்
உறுமதிக் குழவிபோ லொருமருப் புடையோன்
ஒருகையில் தந்தம் ஒருகையிற் பாசம்
ஒருகையின் மோதகம் ஒருகையிற் செபஞ்செய்
உத்தம மாலையோன் உறு நினைவின்படி
சித்தி செய்வதனாற் சித்தி விநாயகன்
என்று இமையவரும் யாவருந் துதிப்ப
நன்றி தரும் திருநாமம் படைத்தோன்
புரவலர்க் காணப் புறப்படும் போதும்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்

வித்தி யாரம்பம் விரும்பிடும் போதும்
உத்தி யோகங்கள் உஞற்றிடும் போதும்
ஆங்கவன் தன்னை அருச்சனை புரிந்தாற்
தீங்கு உறாது எல்லாஞ் செயம் உண்டாகும்
கரதலம் ஐந்துடைக் கணபதிக்கு உரிய
விரதமொன்று உளது அதை விரும்பி நோற்றவர்க்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பத் துண்டாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புந்தியில் நினைந்த பொருள்கை கூடும்
மேவலர் தம்மையும் வென்றிட லாமெனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு

நுவலரும் விரதம் நோற்றிடும் இயல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசை செய்விதமும்
விரித்தெமக்கு உரைத்திட வேண்டுமென்று இரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துரை செய்வான்
தேருநீர் ஆவணித் திங்களின் மதிவளர்
பூர்வ பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறை நீர் படிந்து
சந்தி வந்தனந் தவறாது இயற்றி
அத்தினம் அதனில் ஐங்கரக் கடவுளைப்
பத்தியோடு அர்ச்சனை பண்ணுதல் வேண்டும்

வெள்ளியாற் பொன்னால் விளங்கும் அவன் தன்
ஒள்ளிய அருள் திரு உருவுண்டாக்கிப்
பூசனை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசுஇலா மண்ணால் அமைத்தலுந் தகுமால்
பூசனஞ் செயுமிடம் புனித மாக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகம் கோசிகம் கொடி விதானித்து
நீடிய நூல்வளை நிறைகுடத்து இருத்தி
விந்தைசேர் சித்தி விநாயகர் உருவைச்
சிந்தையில் நினைந்து தியானம் பண்ணி

ஆவா கனம் முதல் அர்க்கிய பாத்தியம்
வாகார் ஆச மனம் வரை கொடுத்து
ஐந்து அமிர்தத்தால் அபிடேகித்துக்
கந்தம் சாத்திக் கணேச மந்திரத்தால்
ஈசுர புத்திரன் என்னும் மந்திரத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசு அகல் இரண்டு வத்திரஞ் சாத்திப்
பொருந்து உமை சுதனாப் புகலு மந்திரத்தால்
திருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்
பச்சறுகுடன் இருபத்தொரு விதமாய்
பத்திர புஸ்பம் பலபல கொணர்ந்தே

உமாசுதன் கணாதிபன் உயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசாங் குசகரன்
ஏக தந்தன் ஈசுர புத்திரன்
ஆகு வாகனன் அருள்தரு விநாயகன்
சர்வ காரியமுந் தந்தருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி என்னும் நாமங்களால்
ஆரம்பத்துடன் அர்ச்சனை பண்ணி
மோதகம் அப்பம் முதற் பணிகாரம்
தீது அகல் மாங்கனி தீங்கதலிப்பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியொடு

தரித்திடு நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி பால்தயிர் போனகம்
விருப்புள சுவைப்பொருள் மிகவும் முன்வைத்து
உருத்திரப்பிரியன் என்று உரைக்கும் மந்திரத்தால்
நிருந்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்ற நானான்கு உபசாரமும்
மற்றவன் திருவுளம் மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி இருபிறப் பாளர்க்கு
உண் அறு சுவைசேர் ஓதனம் நல்கிச்
சந்தன முத்துத் தானந் தக்கிணை

அந்தணர்க்கு ஈந்திட்டு அருச்சகன் தனக்குத்
திருத்தகும் விநாயகத் திருவுருவத்தைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரித்த வத்திரத்துடன் தானமாக் கொடுத்து
நைமித்திகம் என நவில்தரு மரபால்
இம்முறை பூசனை யாவர் செய்தலும்
எண்ணிய கருமம் யாவையும் முடிப்பர்
திண்ணிய செருவிற் செயம்மிகப் பெறுவர்
அரன் இவன் தன்னை முன் அர்ச்சனை பண்ணிப்
புரமொரு மூன்றும் பொடிபட எரித்தான்
உருத்திரன் இவனை உபாசனை பண்ணி

விருத்திரா சுரனை வென்று கொன்றிட்டான்
அகலிகை இவன்தாள் அர்ச்சனை பண்ணிப்
பகர்தருங் கணவனைப் பரிவுட னடைந்தாள்
தண்ணார் மதிமுகத் தாள் தமயந்தி
அன்னாள் இவனை அர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவு நளனை அடைந்தாள்
ஐங்கரக் கடவுளை அர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேரறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை அடைந்தான்
பகிரதன் என்னும் பார்த்தி வன் இவனை

மகிதலந் தன்னின் மலர்கொடு அர்ச்சித்து
வரநதி தன்னை வையகத்து அழைத்தான்
அட்ட தேவதைகளும் அர்ச்சித்து இவனை
அட்ட போகத்துடன் அமிர்தமும் பெற்றார்
உருக்மணி என்னும் ஒண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபாலன் தான்
கொண்டு போம் அளவிற் குஞ்சர முகவனை
வண்டு பாண்மிழற்றா மலர்கொடு அர்ச்சித்துத்
தாரியின் மறித்தவன் தனைப்புறங் கண்டு
யாமும் அங்கு அவளை இன்புறப் பெற்றோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விளைந்தன பெற்றார்
இப்புவி தன்னில் எண்ணிலர் உளரால்
அப்படி நீவிரும் அவனை அர்ச்சித்தால்
எப்பொருள் விரும்பினீர் அப்பொருள் பெறுவீர்
என்று கன்றெறிந்தோன் எடுத்திவை உரைப்ப
அன்றுமுதல் தருமனும் அனுசரும் இவனைப்
பூசனை புரிந்து கட்புலன் இலான் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிபர் ஆகிச்சிந்தையில்
நினைத்தவை செகத்தினிற் செயங்கொண்டு

அந்தமில் செல்வத்து அரசியல் பெற்றார்.
ஈங்கு இது நிற்க இவ்விரதத்து இயல்
ஓங்கிய காதை மற்றொன்று உரை செய்வாம்
கஞ்சநான் முகன் தரும் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனத்தாள் மாயை தன் வயிற்றிற்
சூரன் என்று ஒருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி அனைத்தையும் அழித்தே
சீருடைச் சுவர்க்கத் திருவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரந் தீய நெறி நடத்துதலால்

ஆயிரங் கண்ணனும் அமரரும் முனிவரும்
நீ இரங்கு எமக்கென நெடுங்கரங் கூப்பி
இரசத கிரிஉறை இறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைகள் உரைக்கச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கதிர்விடு வடிவேல் கரதலத்து ஏந்தும்
புதல்வனைத் தருவோம் போமின் நீர் என
என அமரர் கோனுக்கு அரன்விடை கொடுத்துச்
சமரவேல் விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடாது ஊடலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிய வானோர் ஒருங்குடன் கூடிப்
பாவகன் தன்னைப் பரிவுடன் அழைத்துச்
சூரன் செய்யுந் துயரம் எல்லாம்
ஊர் அரவு அணிந்தோற்கு உரையென உரைப்பக்
காமனை எரித்த கடவுள் என்றஞ்சிப்
பாவகன் பயமுறப் பயமுனக்கு ஏதென
உற்றிடுங் கரத்தலத்து உன்னையே தரித்தான்
நெற்றியின் நயனமும் நீயே ஆதலிற்
குற்றம் அடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் தானுந்

தானும் அச் சபையில் தரியாது ஏகி
எமை ஆளுடைய உமையாளுடனே
அமையா இன்பத்து அமர்ந்து இனிது இருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகலும்
ஒள்ளிய மடந்தை ஒதுங்கி நாணுதலுந்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
ஆறுமுகப் பிள்ளையை அவன் கையில் ஈதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீண்முடிச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் மலர்கையிற் கொடுப்ப

நீதி யோடு நின்று கையேந்திப்
போத நீள் வாயுவும் பொறுக்க ஒண்ணாமல்
தரும்புனற் கங்கை தன்கையில் கொடுப்பத்
தரும்புனற் கங்கையுந் தாங்கவொண்ணாமற்
பொருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தண்ஆர் வதனத் தாமரை ஆறுங்
கண் ஆறு இரண்டும் கரம் ஈராறும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண் எனத் திரண்ட தோள் ஈராறும்
மாண் அயில் ஆதி வான்படை யுங்கொண்டு
அறுமுகக் கடவுள் அங்கு அவதரித் திடலும்

மறுகிய உம்பர் மகிழ்ந்து உடன்கூடி
அறுமீன் களைப்பால் அளித்தீர் என்று அனுப்ப
ஆங்கவர் முலையுண்டு அறுமுகன் தானும்
ஓங்கிய வளர்ச்சி உற்றிடும் நாளில்
விமலனும் உமையும் விடையுகைத்து ஆறு
தலைமகன் இருந்த சரவணத்து அடைந்து
முருகுஅலர் குழல் உமை முலைப்பால் ஊட்ட
இருவரும் இன்பால் எடுத்து எடுத்து அணைத்துத்
தேவர் தம்படைக்குச் சேனா பதியெனக்
காவல்கொண்டு அளிக்கக் கதிர்முடி சூட்டி

அயில்வேல் முதற்பல ஆயுதங் கொடுத்துத்
திசையெலாஞ் செல்லுந் தேருமொன்று உதவிப்
பூதப் படைகள் புடைவரப் போய் நீ
ஓதுறும் அவுணரை ஒறுத்திடு என்றனுப்ப
இருளைப் பருகும் இரவியைப் போலத்
தகுவரென்று அவரைச் சமரிடை முருக்கிக்
குருகுபேர் பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற இந்திரன் மகளாந்
தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட்டு

அமரர் கோனுக்கு அமருலகு அளித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்க
அமரா வதியில் அமர்ந்து இனிது இருந்தான்
சமர வேலுடைச் சண்முகன் வடிவுகண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் மாதர் அனைவரும் மயங்கி
எண்டருங் கற்பினை இழந்தது கண்டே
அண்டர் எல்லாம் அடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்து அடி வணங்கி
மருமலர்க் கடம்பன் எம் மாநகர் புகாமல்
அருள்செய வேண்டும் நீ அம்பிகா பதியென

இமையவர் உரைப்ப இறையவன் தானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல்கொண்டு எம்வினை கட்டறுத்து அருளுஞ்
சேவலங் கொடியோன் தேசம் போகத்
திருந்திழை உமையாள் அருந்துயர் எய்தி
வருந்தி முன்னிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீ தான் வருந்துதல் ஒழிகுதி
அங்கையாற் சூதெறிந்து ஆடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமயம்

புற்றுஅரவு அணிந்த புனிதனைக் காண அங்கு
உற்றனன் திருமால் ஊழ்வினை வலியாற்
சக்கிர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புடன் ஆடச்
சாயக நேருந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் தோற்ப
இன்பவாய் இதழ் உமையாள் வென்றேன் என
எம்பெருமானும் யான்வென்றேன் என
ஒருவர்க் கொருவர் உத்தரம் பேசி
இருவருஞ் சாட்சியம் இவனைக் கேட்ப


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமனை வதைத்த மால்முகம் நோக்கிக்
காமனை எரித்தோன் கண்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றாள் என்றுந்
தோற்ற நாயகன் வென்றான் என்றும்
ஒன்றிய பொய்க்கரி உடன் அங்கு உரைப்பக்
கன்றிய மனத்தொடு கவுரி அங்கு உருத்து
நோக்கி நீ இருந்தும் நுவன்றிலை உண்மை
வாக்கினில் ஒன்றாய் மனத்தினில் ஒன்றாய்
மைக்கரி யுரித்தோன் வதனம் நோக்கிப்
பொய்க்கரி உரைத்த புன்மையினாலே

கனலென வயிற்றிற் கடும்பசி கனற்ற
நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள் வீற்றிருக்கும்
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகில் நிறத்து உருப்போய்த்
துளவு அணி மருமனுந் துணை விழியிழந்தே
ஆண்டு அரைக் கணத்தில் ஆயிரம் யோசனை
நீண்டவைப் பாந்தள் நெட்டுடல் எடுத்து
வளர்மருப்பு ஒன்றுடை வள்ளல் வீற்றிருக்கும்
கிளர்சினை ஆலின் கீழ்க்கிடந் தனனால்

திரிகடக் கரியின் திருமுகக் கடவுளும்
வழிபடும் அடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத்தின் கீழ் இருந்தான்
கம்ப மாமுகத்துக் கடவுள் தன் பெருமையை
அம்பு வியோருக்கு அறிவிப்போம் என
உம்பர் உலகத்து ஓர் எழு கன்னியர்
தம்பநூல் ஏணியில் தாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழுது ஏத்திக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகைக் கார்த்திகைக் கழிந்த பின்னாளில்
ஆர்த்த கலிங்கத்து அணியிழை வாங்கி

இருபத்தோர் இழை இன்புறக் கட்டி
ஒருபோது உண்டி உண்டு ஒரு மனமாய்
வேதத்து ஆதியும் பூமியில் எழுத்தும்
ஆதி விநாயகற்கு ஆன எழுத்தும்
மூன்றெழுத்து அதனால் மொழிந்த மந்திரமும்
தேன்தருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினாறு உபசாரத்தால்
வரைமகள் மதலையை வழிபாடு ஆற்றி
இருபது நாளும் இப்படி நோற்று
மற்றை நாள் ஐங்கர மாமுகன் பிறந்த

அற்றைநாள் சதயமும் ஆறாம் பக்கமுஞ்
சேரும் அத் தினத்தில் தெளிபுனல் ஆடி
வாரண முகத்தோன் வதிபெருங் கோயில்
சீர்பெற மெழுகித் திருவிளக் கேற்றிக்
குலவுபொற் கலைகள் கொடு விதானித்து
மலர்பல தொடுத்திடு மாலைகள் ஆற்றிக்
கொலைபுரி வடிவேற்குகற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சனம் ஆட்டிப்
பொற்கலை நன்னூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிக்

செருந்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருத்து மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன்னை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழல் மகிழ் இரு வாட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமரை முல்லை தழையவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்தள் ஆத்தி கடம்பு செவ்வந்தி
வாய்ந்த நல்எருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி அறுகு
முத்தளக் கூவிளம் முதலிய சாத்தித்

தூப தீபங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்பம் மோதகம் அவல் எள்ளுருண்டை
முப்பழந் தேங்காய் முதிர்மொழிக் கரும்பு
தேனுடன் சர்க்கரை செவ்விள நீருடன்
பால்நறு நெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கண்டு நோலாது இருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானும் நோற்பேன் என

ஆங்கு அவன் தனக்கும் வேண்டுவது அளித்துப்
பாங்கொடு இவ்விரதம் பரிந்து நோற்பித்தார்
அண்டர் நாயகனாம் ஐங்கரன் அருளால்
விண்டுவும் பண்டுஉள வேடம் பெற்றே
உஞ்சைமா நகர்புகுந்து உமையொடு
விமலன் கஞ்சநாள் மலர்ப்பதங் கைதொழு திடலும்
பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சினம் மிகுந்து விமலனை நோக்கி
யானிடுஞ் சாபம் நீங்கியது ஏதென
மானெடுங் கண்ணி மணிக்கதவு அடைப்ப


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையவன் இதற்குக் காரணம் ஏதென
மறிகடல் துயிலும் மாயவன் உரைப்பான்
பிறைமருப்பு ஒன்றுடைப் பிள்ளை அன்று
எனக்குத் தந்தருள் புரிந்த தவப்பயன் ஈதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி அடைத்த பொன்தாழ் நீங்கச்
சாங்குமுன் உரைத்த சக்கர பாணி
இக்கதை சொல்ல அக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விருப்புடன் நோற்றபின்
மாதுஉமை அடைந்த வன்தாழ் நீக்கி

நாதனை நணுகிட நம்பனும் நகைத்தான்
நானோ வந்தது நகையானது எனத்
தேன்நேர் மொழியாள் தெளியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்
உன்மகன் நோன்பின் உறுதி அறிந்து
சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமில் அரனை ஆயிழை வணங்கிப்
பொருஞ் சூர் அறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருத்தி நோற்பேனென
இறையவன் கதைசொல ஏந்திழை நோற்றபின்

குறமட மகளைக் குலமணம் புரிந்தோன்.
சுடர்வடி வேலோன் தொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டு உழுந்தாமத் தாமனை
மாதுமை யாளை வந்து கண்டனனே
கண்ண நீ கண்ணிலாக் கட்செவி ஆகுளனக்
தண்நறுங் குழலுமை சாபமிட்டதுவும்
அக்கு நீறணியும் அரன்முதல் அளித்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கின விநாயகன் விரதம் நோற்று அதன்பின்
சுடர்க்கதை ஏந்துந் துளவ மாலையன்
விடப்பணி உருவம் விட்டு நீங்கியதும்,

பவுரிகொள் கூத்துடைப் பரமனும் நோற்றுக்
கவுரி அன்று அடைத்த கபாடந் திறந்ததும்,
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததும்,
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்,
நாரத முனிவன் நவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னில் இவ்விரதத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் நோற்றுக்
காயத் தெழுந்த கடும்பிணி தீர்த்து
மாயிரும் புவியின் மன்னனாய் வாழ்ந்து

தடமுலைத் திலோத்தமை தனைமணம் புரிந்து
மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கயிலையில் உற்றான்
பரிவொடு இவ்விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்ர மாதித்தன்
மறிகடற் புவிபெற வருந்தி நோற்றிடுநாள்
மற்றவன் காதல் மடவரல் ஒருத்தி
இற்றிடும் இடையாள் இலக்கண சுந்தரி
மெத்த அன்புடன் இவ் விரதம் நோற்பேனென
அத்தந் தன்னில் அணியிழை செறித்துச்

சித்தம் மகிழ்ந்து சிலநாள் நோற்றபின்
உற்ற நோன்பின் உறுதி மறந்து
கட்டிய இழையைக் காரிகை அவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கு அது தழைத்தே அலருந் தளிருமாய்ப்
பாங்குற ஓங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச் சிறையிருந்த
பூப்பயில் குழல்சேர் பொற்றொடி யொருத்தி
அவ்வியம் இல்லாள் அவ்விடந் தன்னிற்
கொவ்வை அடகு கொய்வாள் குறுகி

இழையது கிடப்பக் கண்டு அவள் எடுத்துக்
குழைதவிழ் வரிவிழிக் கோதை கைக்கட்டி
அப்பமோடு அடைக்காய் அவைபல வைத்துச்
செப்பமுடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகத்து அண்ணல் கருணை கூர்ந்து
பண்டையில் இரட்டி பதம் அவட்கு அருள
கொண்டுபோய் அரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிர மாதித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிரமான உடைமணி கட்டித்
தண்டையுஞ் சிலம்புந் தாளினின்று ஒலிப்பக்

கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கு மன்னவன் தன்னிடங்
கனவினில் வந்து காரண மாக
இலக்கண சுந்தரி இம்மனை இருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்
துண்ணென எழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ணல் உரைத்திடும் அவ்வழி தன்னில்
ஆனை குதிரை அவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமைப்பொழுது இவள் இங்கு இருக்கலாகாது என
அயற் கடை அவனும் அகற்றிய பின்னர்
வணிகன் தனது மனைபுகுந்து இருப்ப
மணியும் முத்தும் வலிய கல்லாய்விட
அணியிழை தன்னை அவனும் அகற்ற
உழவர் தம்மனையில் உற்று அவள் இருப்ப
வளர்பயிர் அழிந்து வளம்பல குன்ற
அயன்மனை அவரும் அகற்றிய பின்னர்க்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்
குயக்கலம் உடைந்து கொள்ளை போக

அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்த்
தூசுதூய்து ஆக்குந் தொழிலோர் மனைபுகத்
தூசுகளெல்லாந் துணிந்து வேறாகத்
தூசரும் அவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளமனை புகலும்
மலை பாம்பாம் வகையது கண்டு
ஞாலம் எல்லாம் நடுங்கவந்து உதித்தாய்
சாலவும் "பாவிநீ தான்யார்?" என்ன
வெம்மனம் மிகவும் மேவி முனிவுறா
அம்மனை அவனும் அகற்றிய பின்னர்

அவ்வை தன்மனை அவள் புகுந்திருப்ப
அவ்வை செல்லும் அகங்கள் தோறும்
வைதனர் எறிந்தனர் மறியத் தள்ளினர்
கைகொடு குத்தினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டும் தன் அகம் அதிற்சென்று
இவ்வகைக் கன்னி நீ யாரென வினாவக்
காத்தாண்டு உலகு கருணையோடு ஆண்ட
மார்த்தாண்ட ராசன் மாமகள் ஒருத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லார்க்கும் மூத்தாள் இலக்கண சுந்தரி
சொல்லும் விக்கிரம சூரியன் மனையெனச்

சீர்கெட இருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலம் மெழுகிடுக எனச்
சாணி எடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியும் உழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மானேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி எடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரை மெழுக்கிட்டு
மண்ணிய வீட்டில் மணிவிளக்கு ஏற்றிப்
புத்தகம் எடுத்து வாவெனப் புகலப்

புத்தகம் பாம்பாய்ப் பொருந்தி நின்றாட
மெத்தஉள் நடுங்கி வீழ்ந்தவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய்க் கோதையை விலக்கி
அவ்வை தானே அகமதிற் சென்று
புத்தகம் எடுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரியம் இதுவென
உத்தமி அவ்வை உணர்ந்து முன்அறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
நுவலரும் விநாயக நோன்பு நோற்றிடுக எனக்

கரத்து மூஏழு இழைக் காப்புக் கட்டி
அப்பமும் அவலும் ஆம் பல பண்டமுஞ்
செப்ப மதாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகா விரதத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தகமாக விளங்கிழை நோற்றுக்
கற்பக நம்பி கருணை பெற்றதன் பின்,
சக்கர வாள சைனியத்தோடு
விக்ர மாதித்தன் வேட்டையிற் சென்று
தானுஞ் சேனையுந் தண்ணீர் விரும்பி

எவ்வகை செய்வோம் எனஉளம் மெலிந்தே
அவ்வை தன்மனை அங்குஅவர் அணுக
எய்துந் தாகமும் இளைப்புங் கண்டு
செவ்வே அவற்றைத் தீர்க்க எண்ணி
இலக்கண சுந்தரி என்பவள் தன்னை
அப்பமும் நீரும் அரசற்கு அருள்எனச்
செப்பிய அன்னை திருமொழிப் படியே
உண்நீர்க் கரகமும் ஒரு பணிகாரமும்
பண்நேர் மொழியாள் பார்த்திபற்கு உதவ
ஒப்பறு படையும் உயர்படை வேந்தனும்

அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை அவைகளும் உண்டுந்
தான்அது தொலையாத் தன்மையைக் கண்டே
இவ்வகை சமைத்த நீ யாரென வினவ
மவ்வல் அம் குழலாள் மௌனமாய் நிற்ப
அவ்வை தான்சென்று அரசற்கு உரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங் காண் இது
குணமுடை இவள் உன் குலமனையாட்டி
இலக்கண சுந்தரி என்று அவ்வை கூற
மங்கையை நோக்கி மனம்மிக மகிழ்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்கள்நேர் வெள்ளிச் சிவிகையில் ஏற்றிக்
கொண்டுஊர் புகுந்தான் கொற்ற வேந்தனும்
ஒண்தொடி யாரில் உயர்பதம் உதவினன்
சிந்துர நுதலார் சென்று அடி பணியச்
சுந்தரி இருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே. 745

## நூற்பயன்

(1) பொன்னுமிகுங் கல்விமிகும் புத்திரரோ டெப்பொருளும்
மன்னு நவமணியும் வந்தணுகும் - உன்னி
ஒருக்கொம்பின் யானைமுக வுத்தமனார் நோன்பின்
றிருக்கதையைக் கேட்கச் சிறந்து.

(2) பொற்பனைக்கை முக்கட் புகர்முகத்துப் பொன்மவுலிக்
கற்பகத்தி னோன்பின் கதைதன்னைச் - சொற்பெருகக்
கற்றவரு நோற்றவருங் காதலித்துக் கேட்டவரும்
பெற்றிடுவர் கற்பகத்தின் பேறு.

(3) வெள்ளை யெருதேறும் விரிசடையோன் பெற்றெடுத்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை - உள்ளபடி
நோற்றார் மிகவாழ்வர் நோலாதருகிருந்து
கேட்டார்க்கும் வாராது கேடு.

(4) சூலிலார் நோக்கிற் சுதரை மிகப்பெறுவார்
சாலமிகும் வெங்கலியார் தாம்நோற்கில் - மேலைப்
பிறப்பெல்லாம் நல்ல பெருஞ்செல்வம் எய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்து.

திருச்சிற்றம்பலம்

பிள்ளையார் கதை முற்றுப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போற்றித் திருவகவல்

அருள்புரிந் தருளு மரசே போற்றி
இருவினை துடைக்கு மிறைவா போற்றி
மறைமுனி யொருவன் மாங்கனி கொண்ர்ந்து
கறைமிடற் றிறைவன் கையில் கொடுப்ப
வேலனு நீயும் விரும்பிமுன்னிற்ப
ஒருநொடி யதனிலுலகெலாம் வலமாய்
வருமவர் தமக்கு வழங்குவோம் யாமென
விரைவுடன் மயின்மிசை வேலோன் வருமுனர்
அரனை வலம்வந் தக்கனி வாங்கிய
விரகுள விக்கின விநாயக போற்றி
முன்னடி தெரியா முதல்வனைப் போற்றிப்
பின்னடி தெரியாப் பெருங்கவிப் பெருமான்
மண்மிசை வைத்துனை வாவியிற் செல்லக்
கண்ணிலா னிவனெனக் கரந்தவன் போகக்
கரமிசை யேறிக் காணா திரங்கி
உரைதடு மாறி யுள்ளங் கலங்கிக்
கூகூ கணபதி கூகூ வென்னக்
கூகூ வென்றருள் குன்றே போற்றி
அப்பணி சடையோன் முப்புர மெரிக்க
இப்புவி யதனை யிரதமாக்கித்
தினகரன் மதிசேர்ச் சில்லியாகப்
பொருவரு மறைகளே புரவியாகச்
சங்கைசேர் நான்முகன் சாரதியாகப்
பங்கயக் கண்ணன் பகழி யாக
மலைசிலை யாக வாசுகி நாணா
நிலைபெற நிற்கு நெடுந்தேர் தன்னில்
விக்கினந் தீர்க்கும் விநாயக நமவெனச்
சிக்கென விறைவன் செப்பா தேறலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தச்சுறச் சமைத்த தகைமணி நெடுந்தேர்
அச்சறுத் தருளு மரசே போற்றி
வேதப் பொருளாம் விமலா போற்றி
பூதப் படையுடைப் புனிதா போற்றி
கரமைந் துடைய களிறே போற்றி
பரமன் பயந்த பாலா போற்றி
அகில மீன்றரு ளம்மை தனக்குத்
திருமக னாகிய செல்வா போற்றி
அற்றவர்க் கருள்புரி யரசே போற்றி
கற்றவர் மனத்திற் காண்பாய் போற்றி
பாசாங் குசங்கை பரித்தாய் போற்றி
தேசார் மணிமுடித் தேவே போற்றி
எழுநர கெழுபிறப் பறுப்பாய் போற்றி
எழுமையு மெமக்கிங் கிரங்குவாய் போற்றி
துளைசெறி வக்கிர துண்டா போற்றி
வளநிக ரொற்றை மருப்பா போற்றி
வரமிகு மரிதிரு மருகா போற்றி
சுரர்தொழு முருகன் துணைவா போற்றி
நல்லவர் புகழு நம்பா போற்றி
வல்லபைக் குரிய மணாளா போற்றி
கயமுகத் தவுணனைக் காய்ந்தாய் போற்றி
வயமிகு மூஷிக வாகனா போற்றி
ஓங்கா ரத்தனி யுருவே போற்றி
நீங்காக் கருணை நிமலா போற்றி
துறவர் தமக்கொரு துணைவா போற்றி
முறநிகர் தழைசெவி முதல்வா போற்றி
துண்டமா மதிபோற் றுலங்கிய கோட்டைக்
கண்டக மாகக் கைதனிற் பிடித்துப்
பண்டு பாரதப் பழங்கதை பசும்பொன்
விண்டுவில் வரைந்த விமலா போற்றி
போற்றி போற்றியுன் பொற்பதம் போற்றி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருக்கைக் கோவை

அன்புடைக் கடவுளர்க் கதிபதி செயசெய
ஆபத் தகற்று மைங்கர செயசெய
இந்துச் சடைமுடி யிறைவா செயசெய
ஈசன் பெற்ற எம்மான் செயசெய
உன்னிய முடிக்கு மொருவா செயசெய
ஊர்மனை சந்தி யுகந்தாய் செயசெய
எம்பெரு மானே யேகனே செயசெய
ஏழுல குந்தொழ விருப்பாய் செயசெய்
ஐயா கணங்கட் காதீ செயசெய
ஒற்றை மருப்பை யுடையாய் செயசெய
ஓங்கிய கரிமுக முற்றாய் செயசெய
ஔவியமில்லா தவனே செயசெய
அ, ஃகர வணிந்த வாதீ செயசெய
கண்மூன் றுடைய களிறே செயசெய
ஙப்போன் மழுவொன் றேந்தீ செயசெய
சங்கரன் தேரச் சறுத்தாய் செயசெய
ஞயமுடை வித்தக நம்பீ செயசெய
இ, டமுடை விக்கி னேசுரா செயசெய
இ, ணங்கிய வன்பர்க் கினியாய் செய்செய
தத்துவ முறைதரு சாமீ செயசெய
நன்னெறி வித்தக நம்பீ செயசெய
பகீரதிக் கினிய பாலா செயசெய
மன்று ளாடி மகனே செயசெய
இ, யக்கரைக் களையு மிறைவா செயசெய
அ, ரவக் கிங்கிணி யணிவாய் செயசெய
இ, லகக் கொம்பொன் றேந்தீ செயசெய
வஞ்சனைப் பழவினை மாற்றுவாய் செயசெய
அ, ழகிய வேலனுக் கண்ணா செயசெய
இளமத யானை முகத்தாய் செயசெய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இ. றக்கரி சாடு மிறைவா செயசெய
அ. னந்த லாடு மரசே செயசெய

கரமைந் துடைய கணபதி செயசெய
காமன் பகைவன் காதல் செயசெய
கிரியிற் பாரதந் தீட்டினாய் செயசெய
கீழ்மை யொழித்துக் கிளர்வாய் செயசெய
குண்டப் பண்டிக் குருவே செயசெய
கூறிய மும்மதக் கோவே செயசெய
கெண்டையங் கண்ணுமை மகனே செயசெய
கேதா ரப்பிரிய மானாய் செயசெய
கையிற் சக்கர முடையாய் செயசெய
கொவ்வைக் கனிவாய் மதலாய் செயசெய
கோலக் குடநிகர் வயிற்றாய் செயசெய
கௌவைப் பழவினை தீர்ப்பாய் செயசெய

******

வருக்கைக் கோவை முற்றுப் பெற்றது.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்



சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகிலாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்ட முப் புரி நூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பழ நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு தென்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலை ந்தெழுத்துந் தெளிவாய்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடாயுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி யென்செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக்கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலிய தனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத் தறிவித்தே
அமுதநிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முகதூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முகம் ஆக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசெனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டுங் கொன்றிடமென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவுக்கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றிநின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக! விரைகழல் சரணே!.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசிப முனிவர் அருளிய

# விநாயகர் கவசம்



வளர்சிகையைப் பராபரமாய் வயங்கும்
விநாயகர் காக்க வாய்ந்து சென்னி
அளவு படா அதிக சவுந்தர தேக
மகோற் கடர்தாம் அமர்ந்து காக்க
விளரற நெற்றியை என்றும் விளங்கிய
காசியபர் காக்க புவந் தம்மை
தளர்வில் மகோதரர் காக்க
தட விழிகள் பாலச் சந்திரனனார் காக்க. 01

கவின் வளரும் அதரம் கசமுகர் காக்க
தாலம் கணக்கிரீடர் காக்க
நவில் சிபுகம் கிரியை சுதர் நனி காக்க
வாக்கை விநாயகர் தாம் காக்க
அவிர் நகை துன்முகர் காக்க வள் எழில்
செஞ்செவி பாசபாணி காக்க
தவிர்தலுறாது இளங் கொடி போல்
வளர் மணி நாசியை சிந்தார்த்தார் காக்க. 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமரு பூமுகந் தன்னை குணேசர் நனி காக்க
களம் கணேசர் காக்க
வாமமுறு இரு தோளும் வயங்கு
கந்த பூர்வசர் தாம் மகிழ்ந்து காக்க
ஏமமுறும் அணி முலை விக்ன விநாசன்
காக்க இதயந்தன்னை
தோ மகலும் கணநாதர் காக்க அகட்டினை
துலங்கு ஏரம்பர் காக்க. 03

பக்கமிரண்டையும் தராதரர் காக்க
பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினகரன் காக்க விளங்கு லிங்கம்
வியாழ பூடணர் தாம்காக்க
தக்க குய்யந்தன்னை வக்ரதுண்டர் காக்க
சகனத்தை அல்லல்
உக்க கணபன் காக்க ஊருவை
மங்கள மூர்த்தி உவந்து காக்க. 04

தாழ் முழந்தாள் மகா புத்தி காக்க
இருபதம் ஏக தந்தர் காக்க
வாழ் கரம் கிப்பிரப் பிரசாதனார் காக்க
முன்கையை வணங்குவோர் நோய்
ஆழ்தரச் செய் ஆசாரபூசகர் காக்க
விரல் பதும வர்த்தர் காக்க
கேழ் கிளரு நகங்கள் விநாயகர் காக்க
கிழக்கினில் புத்தீசர் காக்க. 05

அக்கினியில் சித்தீசர் காக்க
உமாபுத்திரர் தென்னாசை காக்க
மிக்க நிருதியில் கணேசுரர் காக்க
விக்கின வர்த்தனர் மேற்கென்னும்
திக்க தனிற் காக்க வாயுவில் கசகன்னன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்க திகழ் உதீசி
தக்க நிதிபன் காக்க வட கிழக்கில்
ஈச நந்தனரே காக்க. 06

ஏகதந்தர் பகன் முழுவதும் காக்க
இரவினும் சந்தி இரண்டன் மாட்டும்
ஓகையின் விக்னகிருது காக்க
இராக்கதர் பூதம் உறு வேதாள
மோகினிபேய் இவையாதி உயிர்த்
திறத்தால் வரும் துயரும்
வேமுறு பிணி பலவும் விலக்கு
பாசாங்குசர் தாம் விரைந்து காக்க 07

மதிஞானம் தவம் தானம் மானமொளி
புகழ்குலம் வண் சரீரம் முற்றும்
பதிவான தனம் தானியம் மனைவி
மைந்தர் பயில் நட்பு ஆதிக்
கதியாவும் கலந்து சர்வாயுதர் காக்க
காமர் பவுத்திரர் முன்னான
விதியாரும் சுற்றமெலாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க 08

வென்றி சீவிதம் கபிலர் காக்க
கரி ஆதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வாறு இதுதனை முக்காலமும்
ஓதிடின் நும்பால் இடையூறொன்றும்
ஒன்றுறா முனிவர்காள் அறிமின்கள்
யாரொருவர் ஓதினாலும்
மன்ற வாங்கவர் தேகம் பிணியற
வச்சிரதேக மாகி மன்னும் 09

******

விநாயகர் கவசம் முற்றிற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குமரகுருபர சுவாமிகள் அருளிய

# சகலகலா வல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒளித்தான் பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே! - 01

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்று மைப்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே! - 02

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே! - 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
 கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
 வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
 தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே!
 சகல கலாவல்லியே! - 04

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
 பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
 நெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
 நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
 சகல கலாவல்லியே! - 05

பண்ணும் பரதமும் கல்வியும்
 தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
 விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலுமன்பர்
 கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே! - 06

பாட்டும் பொருளும் பொருளாற்
 பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
 காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லமுதம் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே!
சகல கலாவல்லியே! - 07

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தையுந் தந்தடிமை கொள்வாய்
நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே!
சகல கலாவல்லியே.! - 08

சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே!
சகல கலாவல்லியே! - 09

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ?
சகல கலாவல்லியே! - 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தில் மேய கந்தவேள்



திருச்சிற்றம்பலம்

**காப்பு**

**நேரிசை வெண்பா**

**துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம் போம் நெஞ்சிற்**
**பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்தோங்கும்**
**நிஷ்டையும் கைகூடும், நிமலன் அருள் கந்தர்**
**சஷ்டி கவசந் தனை.**

**குறள் வெண்பா**

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில் வாகனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணபவ வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமுமொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமுந் தரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோத னென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேலிரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிகளிரண்டும் நல்வேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாழ் கதிர்வேல் காக்க
ஐவிரலடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாநாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும் பகை யகல
வல்ல பூதம் வாலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலுமிருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரு மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடனாங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கால்.கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயிரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப்பளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழுலகமும் எனக்குறவாக
ஆணும் பெண்ணும் அனைவருமெனக்கா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணா ளரசரும் மகிழ்ந்துறவாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேல வனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருள் ஆக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்ற வளாமே
பிள்ளையென் அன்பாய்ப் பிரியமளித்து
மைந்தன் என் மீதும் மனமகிழ்ந் அருளித்
தஞ்சமென் அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடன் ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டிக் கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறுணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங்கருளுவர்
மாற்றர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல் எழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடி பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமுதளித்த
குருபரன் பழனிக் குன்றினிலிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் கார்த்திகேசு தம்பிராசா

## அவர்களின்

## வாழ்க்கைச் சுருக்கம்

ஈழவள நாட்டின் தலைமைக் குடமாக அமைந்த யாழ்ப்பாணத்தில் எழில் மிகு கிராமமாகத் திகழ்வது அளவெட்டி. மிகச்சிறப்புப் பெற்ற தெய்வத் திருத்தலங்கள், கல்விக்கூடங்கள், விவசாய வளங்கள் நிறையப் பெற்ற சிறப்புடையது இக் கிராமம். இவ்வூரில் வாழ்வும் வளமும் செல்வமும் ஒருங்கமையப் பெற்ற சைவ வேளாளர் குலத்தில் பிறந்த கார்த்திகேசு பொன்னம்மா அவர்களுக்கு கனகம்மா, இராசையா, கந்தையா, சரஸ்வதி, நாகேஸ்வரி, தம்பிராசா ஆகியோர் பிள்ளைகளாகப் பிறந்தனர். இவர்களில் இளைய மகனான தம்பிராசா 1939.12.18 இல் பிறந்தார்.

இவர் தனது இளமைக் கல்வியை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் உயர் கல்வியை அருணோதயாக் கல்லூரியிலும் கற்று நிறைவு பெற்றார். இவர் தனது தந்தையின் விவசாயத்துக்கு நன்கு உறுதுணையாக இருந்தவர். பின்பு இவர் கண்டியில் உள்ள ஒரு பாடசாலையில் ஆசிரியரா கக் கடமை புரிந்த வேளையில் சீரும் சிறப்பும் வாய்ந்த கிராமமான கோண்டாவில் என்னும் கிராமத்தில் வசித்து வந்த தம்பு நாகரத்தினம் தம்பதியினருக்கு தருமலிங்கம், தெய்வேந்திரம், தவமணி, சரஸ்வதி என்னும் பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். இவர்களில் தவமணியைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பிராசா திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு சரஜென்மன் (லண்டன்) சத்தியவண்ணன் (ஜேர்மனி), உமா (ஆசிரியை. யா/நடேஸ்வராக் கல்லூரி), நவநீதன் (லண்டன்), யாழினி (கனடா) ஆகியோர் பிள்ளை களாகக் கிடைக்கப்பெற்று, அவர்களுக்குச் சிறந்த கலவியைப் புகட்டி நற் பிரஜைகளாக உருவாக்கினார். இவர்களுக்கு உரிய காலத்தில் திருமணம் செய்துவைத்து மருமக்கள் பேரப்பிள்ளைகளையும் கண்டு பெரும் சிறப்புடனும் சந்தோஷமாகவும் இணுவில் மஞ்சத்தடியில் வசித்து வந்தார்.

இவர் ஆசிரியராகக் கடமை புரிந்த காலத்தில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டவர். இவர் அனுராதபுர ஆசிரியர் கலாசாலையில் தனது ஆசிரியர் பயிற்சியைப் பெற்றுக் கொண்டார். அதன் பின்பு யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குச் சிறந்த வழிகாட்டி ஆசிரியராகவும் உப அதிபர் ஆகவும் தனது கடமைகளை மேற்கொண்டு அக்கிராமத்தின் வளர்ச்சிக்கும் பாடசாலை யின் கல்வி வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்து சிறந்த மாணவச் செல்வங்களை உருவாக்கியவர்.

1995 இடப்பெயர்வின் பின் கிளிநொச்சி சிவபாதகலய வித்தியாலயத் திலும் 1996 இல் இருந்து வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்திலத்தில் ஆரம்பப் பிரிவில் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்க ளுக்குச் சிறந்த வழிகாட்டி ஆசிரியராகவும் ஆரம்பப் பிரிவு பகுதித் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். அக்காலப் பகுதியில் பெரும்பாலான மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தனர். பாடசாலை யின் கல்வி வளர்ச்சிக்குப் பெருமை தேடிக் கொடுத்தார். 1999 ஆம் ஆண்டு தனது ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வு பெற்றார்.

ஓய்வின் பின்னர் சமூகப் பணிகளையும் விவசாய நடவடிக்கைக ளையும் மேற்கொண்டு வந்தார். இவரது சமூகப் பணியாக முதியோர் சங்கத்தின் பொருளாளராகவும் கிராமத்தின் முன்பள்ளியின் பொருளாளரா கவும் இணுவில் மஞ்சத்தடி முருகன் ஆலய நிர்வாகத்தின் உறுப்பின ராகவும் கடமைபுரிந்து வந்தார். அதுமட்டுமன்றி சுகாதாரக் கருத்தரங்குகள் மற்றும் திருமந்திரச் செயலமர்வுகள் என்பவற்றையும் நடாத்துவதற்கு உறுதுணையாக இருந்தார். 01.12.2021 அன்று பிள்ளையார்கதை விரதத்தின் 11 ஆம் நாள் பிற்பகல் 1.30 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்சிந்தனை

எல்லாம் சிவன் செயல். உலகமெல்லாம் இறைவனின் சந்நிதானம். இறைவனுடைய சந்நிதானத்தில் ஒரு பிழையும் உண்டாகாது. எங்களுக்கு அது வேண்டும் இது வேண்டும் என்று ஆசைப்படவேண்டியதில்லை. எதைக் கடவுள் நமக்குக் கொடுக்கிறாரோ அதை நாம் சந்தோஷமாக ஏற்க வேண்டியது. கடவுளுடைய ஆசீர்வாதம் நமக்கெப்பொழுதும் உண்டு. அதைப்பற்றி நமக்கு சற்றேனும் ஐயமிருக்கப்படாது. சில காரி யங்கள் நமக்கு விளங்காமலிருக்கலாம். அதையிட்டு நாமேன் கவலைப்படவேண்டும். எல்லாம் கடவுளின் சித்தப்படி நடந்து கொண்டு போகின்றன. நாமொன்றுமறியோம். எல்லாம் அவர் அறிவார். எமது கடன் பணிசெய்து கிடப்பதே. இறைவன் சந்நி தானத்தில் நாம் எங்குமிருந்தாலும் நமக்கொரு குறையு மில்லை. எல்லாம் ஈசன் செயல் எனும் உணர்வு நாளாந்தம் வளர்ந்து கொண்டு போக "ஒரு பொல்லாப்பும் இல்லை" எனும் மகாவாக்கியத்தின் உண்மையை நாம் உணரக்கூடியதாய் வரும். கடவுளிலே பூரண விசுவாசமிருக்க வேண்டும். அதை விடச் சிறந்த கவசம் வேறொன்றுமில்லை. என்ன வந்தாலும் அசையாமலிருக்கப் பழக வேண்டும்.

**சஞ்சலம் வந்தாலும் வரட்டும் - வேல் வேல்**
**சற்றும் அலையாமல் சாந்தத்தில் கட்டு**
**ஒரு பொல்லாப்புமில்லை.**

ஓம் தத் சத் தத் சத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கௌரவ விருந்தினராக வவுனியா
மகாவித்தியாலயத்தில் அழைத்தபோது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மஞ்சத்தடி, இணுவில் விவேகானந்தா முன்பள்ளி கலைவிழா 27.12.2017



திருமந்திர விழா நிகழ்வில் கௌரவித்து சான்றிதழ் மற்றும்
கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**06.09.2015 அன்று சமூகப் பணிக்காக சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டபோது**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுகாதார நிகழ்வில் கலந்து சிறப்பித்தபோது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுகாதார நிகழ்வில் கலந்து சிறப்பித்தபோது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமந்திர விழா நிகழ்வில் கௌரவிக்கப்பட்டபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்







அமரர்

## கார்த்திகேசு தம்பிராசா

*(ஓய்வுபெற்ற ஆசிரியர்)*


எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச் செய்திகேட்டு ஓடோடி வந்து இறுதிக் கிரியைகளுக்கான சகல ஒழுங்குகள், ஒத்தாசைகள் வழங்கியோருக்கும், அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலம் இத்துயரில் பங்கு கொண்டவர்களுக்கும், இறுதி நிகழ்வில் கண்ணீர் அஞ்சலி துண்டுப்பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் ஏனைய நிகழ்வில் கலந்து ஒத்தாசை புரிந்த எம் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எம் துயரில் பங்கேற்ற அனைவருக்கும் அடுத்து அந்தியேட்டி கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் கலந்து கொண்ட அனைவருக்கும் இந்நினைவு மலரை செம்மையுற அச்சிட்டுத் தந்த நியூ எவகீறின் அச்சகத்தினருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்.
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்
அது வேறொருவருடையதாகும்.



**"இதுவே உலக நியதியும்**
**எனது படைப்பின்**
**சாராம்சமுமாகும்"**
-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-

நியூ எவகிறீன் அச்சகம் (Pvt) Ltd. யாழ்ப்பாணம். 021 221 9893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org